(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 1 (7)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, செத்தெம்பர் 25, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2008, ஒற்றோபர் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.42/'08

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்கான பாராளுமன்ற நிலையியற் குழுவொன்றை தாபித்தல்,—

சுமார் 50 அமைச்சரவை அமைச்சர்களினதும் 30 அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சர்களினதும் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளையும் செயலாற்றுகைகளையும் பரிசீலிப்பதற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலதின் (வரவு செலவுத்திட்டம்) குழுநிலைப் பரிசீலனையை நிலையியற் கட்டளைகள் 22 தினங்களுக்கு வரையறை செய்கின்றதென்பதனாலும்,

ஒவ்வொரு அமைச்சைப் பற்றியும் கலந்துரையாடுவதற்கு ஒரு தினத்தின் கால்பகுதி ஒதுக்கப்படுகின்றதென்பதனாலும்,

ஒவ்வொரு தினமும் 8 மணித்தியாலங்களே ஒதுக்கப்படுகின்றன என்பதை கருத்தில் கொள்ளும்போது, பெரும்பாலான அமைச்சுக்கள் பற்றி சுமார் 2 மணித்தியாலங்கள்

மட்டுமே கலந்துரையாடப்படும் என அது பொருள்படுவதனாலும்,

ஒவ்வொரு அமைச்சினதும் ஒரு வருடத்தின் செயலாற்றுகையையும் அடுத்து வரும் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் விரிவாக கலந்துரையாடுவதற்கு இது முற்றிலும் போதாதென்பதனாலும்,

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்காக பாராளுமன்ற நிலையியற் குழுவொன்று தாபிக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. இக்குழுவானது பாராளுமன்றச் சபையின் இரண்டு தரப்பிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்டுள்ள பொருத்தமானதொரு பெரிய குழுவாக இருக்கும்.

3. இக்குழுவானது,

(அ) பாராளுமன்றத்திற்கு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து தொடர்ச்சியாக கூடுவதற்கும்,

(ஆ) ஒவ்வோர் அமைச்சினதும் முன்னேற்றத்தையும் அவ்வாறே வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டையும் மீளாய்வு செய்து, வரவுசெலவுத்திட்டம் தொடர்பான தமது விதப்புரைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும்,

(இ) தமது கலந்தாராய்வின்போது, திறைசேரி அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகளையும் சமூகமளிக்குமாறு அழைப்பதற்கும்

தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.